அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624

அ.எண். 49 / 2016
தேதி. 6.3.2016

மார்ச் 8 உலக மகளிர்தினம்
சமத்துவ மக்கள் கட்சி சார்பில் " **சமத்துவ சக்தி**"
சிறப்பு கருத்தரங்க நிகழ்ச்சி
ச.ம.க.நிறுவனர் - தலைவர் **ஆர்.சரத்குமார்** எம்.எல்.ஏ அறிக்கை.

உலக மகளிர் தினத்தையொட்டி வரும் மார்ச் 8 ஆம் தேதி செவ்வாய்க் கிழமையன்று காலை 10 மணியளவில் சமத்துவ மக்கள் கட்சி சார்பில் சென்னை தலைமை அலுவலகத்தில் **"சமத்துவ சக்தி"** என்ற தலைப்பில் கருத்தரங்க நிகழ்ச்சி நடைபெற உள்ளது. தமிழகம் முழுவதும் சமத்துவ மக்கள் கட்சியின் அனைத்து மகளிரணி நிர்வாகிகள் பங்குபெற இருக்கும் இந்நிகழ்ச்சிக்கு மாநில மகளிரணிச் செயலாளர் திருமதி.ராதிகா சரத்குமார் அவர்கள் தலைமை ஏற்று சிறப்புரை ஆற்ற உள்ளார்கள். மகளிர் நலன், மகளிர் பாதுகாப்பு, மகளிர் உரிமை, அரசியலில் மகளிர் பங்கு, சட்ட மன்ற பொதுத்தேர்தலில் சமத்துவ மக்கள் கட்சியின் மகளிரணி செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு கருத்துக்கள் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளன. சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனர்-தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்கள் சிறப்பு ஆலோசனை உரையாற்ற உள்ளார்கள். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாநில மகளிரணி துணைச் செயலாளர் எம்.பாகீரதி மேற்கொண்டு வருகிறார்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

**ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,**
தலைவர்.